# செப்டம்பர் 23

# புனித தெக்ளா

## (முதல் நூற்றாண்டு)




இவள் லிக்க ஒனியா நாட்டில் பிறந்தார். கல்வி பயின்று கடவுளை சிநேகிக்க கற்றுக்கொண்டான். அபபோஸ்தலரான புனித சின்னப்பரே இவளது ஆசிரியர். 45-ஆம் ஆண்டை ஒட்டி அவர் இவளை மனந்திருப்பினார். பிரபு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபனை மணம் முடிக்க இவள் ஒப்பந்தம் செந்திருந்தாள். அந்த ஒப்பந்தத்தை முறித்துவிட்டு தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தாள். அதிலிருந்து தவமுயற்சிகள் செய்து வந்தாள். இதைக்கண்டு பெற்றோர் ஆச்சரியப்பட்டனர். நண்பர்களின் நச்சரிப்பிலிருந்து விடுபடும்படி வீட்டையும், செல்வத்தையும் விட்டு விட்டு புனித சின்னப்பரிடம் போனாள். இவளை மணமுடிக்க விரும்பிய வாலிபன் இவளை நடுவர்களிடம் கையளித்தான். அவர்கள் இவளை காட்டுமிருகங்கள் முன் போட்டார்கள். அவைகள் இவளுக்கு தீங்கு செய்யவில்லை. நெருப்பும் அணுகவில்லை. பல உபாதைகளினின்று இவள் புதுமையாகத் தப்பித்தாள்.

இவள் புனித சின்னப்பரோடு பிரயாணம் செய்ததாக சொல்லப்படுகிறது. அவரையே கண்டுபாவிக்க இவள் முயன்று வந்தாள். வாழ்வின் பிற்பகுதியை இசோரியா என்னும் இடத்தில் இவள் செலவழித்தாள். வேதத்திற்காக மிகுந்த உபாதைகள் இவள் அனுபவித்தபடியால் வேதசாட்சி என்று அழைக்கப்படுகிறாள்.

**சிந்தனை:** இவள் தன் ஆன்மாவைக் காப்பாற்றும்படி நண்பர்களையும், வீட்டையும், செல்வத்தையும் விட்டு ஓடினாள். ஆன்மாவைக் காப்பாற்ற என்ன தியாகம் செய்தாலும் தகும்.

**செபம்:** ஆண்டவரே, என் உடலைவிட ஆன்மாவை நான் அதிகம் நேசிக்கும் வரம் தாரும்.